# ஹம்பாந்தோட்டை மாநகர சபை
# ஹம்பாந்தோட்டை மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 செப்டெம்பர் 17 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டின் நவெம்பர் மற்றும் டிசெம்பர் ஆகிய இரு மாத காலப்பகுதிக்குரிய நிதிசார் கூற்றுக்கள் 2013 ஜனவரி 24 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 டிசெம்பர் 24 ஆந் திகதியன்று மாநகர முதல்வருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் காரணமாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஹம்பாந்தோட்டை மாநகர சபையின் 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை நான் வெளியிடவில்லை.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) ஹம்பாந்தோட்டை நகர சபை மாநகர சபையாக மாற்றமடைந்ததையடுத்து ஹம்பாந்தோட்டை பிரதேச சபையால் ஒப்படைக்கப்பட்ட ரூபா 68,002,818 க்கான சொத்துக்களும் ரூபா 4,262,501 க்கான பொறுப்புகளும் சட்டபூர்வமாகச் சுவீகரிக்கப்பட்டுக் கணக்கிலிடப்படவிலலை.

(ஆ) சுற்றுலாச் சபையில் பதிவு செய்யப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஹோட்டல் அல்லது வாடிவீட்டிலிருந்து அறவிடப்படும் 1 சதவீதம் அனுமதிப் பத்திரக் கட்டணமாக ஹம்பாந்தோட்டை வாடி வீட்டிலிருந்து மீளாய்வாண்டில் பெறப்பட வேண்டிய ரூபா 77,007 கணக்கிலிடப்படவில்லை.

(இ) மீளாய்வாண்டு முடிவில் பெற வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 1,770,492 ஆகும். எனினும், கணக்கிலிடப்பட்ட தொகை ரூபா 1,172,208 ஆகும்.

(ஈ) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் பெற வேண்டியிருந்த ரூபா 769,916 முத்திரைக் கட்டண வருவாய் கணக்கிலிடப்படவில்லை. மீளாய்வாண்டு முடிவில் பெற

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | தீர்வையும் வரியும் | 3,770 | 3,779 | 2,190 |
| (ii) | குத்தகை வாடகை | 9,402 | 12,258 | 423 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 365 | 1,196 | - |
| (iv) | பிற வருவாய் | 48,410 | 23,564 | 2,012 |

## 2.2.2 தீர்வையும் வரியும்

பின்வருவன அவாதானிக்கப்பட்டன

(அ) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 230(1) ஆம் பிரிவின் பிரகாரம் 2011 நவம்பரில் ஹம்பாந்தோட்டை பிரதேச சபையால் ஒப்படைக்கப்பட்ட கொஹொலங்கல, சிறிபோபுர, கேலியபுர, சாமோதாகம, மிரிஜ்ஜவில ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் தீர்வை, வரி என்பவற்றை மதிப்பீடு செய்து புதிய வாடகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) மீளாய்வு முடிவிலான தீர்வை, வரி நிலுவை ரூபா 1,880,118 ஆகும். நிலுவையாக உள்ள தீர்வையையும் வரியையும் அறவிடுவதற்கு மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 252(1) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. 2012 ஒக்டோபர் 08 ஆந் திகதியளவில் நிலுவையாக உள்ள தீர்வையிலும் வரியிலும் ரூபா 235,331 அறவிடப்பட்டிருந்ததாக மாநகர முதல்வர் எனக்கறிவித்திருந்தார்.

(இ) ஹம்பாந்தோட்டை மேற்கு மற்றும் ஹம்பாந்தோட்டை கிழக்கு ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 2011 ஆம் ஆண்டு தீர்வையும் வரியும் மீள மதிப்பீடு செய்யப்பட்டிருந்தபோதும், அப் புதிய மதிப்பீட்டின் பிரகாரம் தீர்வையும் வரியும் அறவிடப்படுவதற்கு 2012 ஆம் ஆண்டின்போது நடவடிக்கை எடுக்கப்படவில்லை இதற்கான சபையின் அங்கீகாரம் கிடைக்காமையால் மதிப்பீட்டிற்கு ஏற்ப தீர்வையும் வரியும் அறவிடப்படாது போயிற்று என மாநகர முதல்வர் அறிவித்திருந்தார்.

2012 ஆம் ஆண்டினபோது அமுலாகிய வேலைகளுக்கு அவ்வாறு சிபார்சு பெறப்படவில்லை.

## 2.6 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) பல்வேறு நபர்களிடமிருந்தும் நிறுவனங்களிலிருந்தும் பெறப்பட்ட மற்றும் அறவிடப்பட்ட தொகை ரூபா 3,228,878 நானாவித வைப்புகளின் கீழ் ஆண்டின் இறுதியில் காட்டப்பட்டிருந்தது. காலங் கடந்த வைப்புகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571(3) க்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) மாநகர சபைக்கென 2012 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட வரவு, செலவுத் திட்டத்தில் ஆண்டின்போது நிறைவேற்ற வேண்டிய அபிவிருத்திக்கான முன்மொழிதல்கள் மற்றும் அங்கத்தவர்களது முன்மொழிதல்கள் எதுவுமே உள்ளடங்கவில்லை.

(இ) 2012 ஆம் ஆண்டினது வரவு, செலவுத் திட்டத்தில் மூலதன வரவாக ரூபா 2,300,000 மதிப்பிடப்பட்டிருந்தபோதும், மூலதனச் செலவினமாக மதிப்பிடப்பட்டது ரூபா 165,000 ஆகும். மதிப்பீடு சாத்தியமானதாக அமையவில்லை.

(ஈ) வருடாந்த வரவு, செலவுத்திட்டத்தில் காட்டப்பட்ட வருவாய் மற்றும் செலவினம் ஆகியவற்றினது மதிப்பீட்டுப் பெறுமதி உள்ளபடியான வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பிடப்படுகையில் மிக அதிகமான வேறுபாட்டைக் காட்டின.

## 2.7 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டில் போதிய உள்ளகக் கணக்காய்வு நடைபெறவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருவாய் நிர்வாகம்

(இ) சொத்து முகாமைத்துவம்